வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூலை - 2017
## Term Examination, July - 2017

| தொடர்பாடலும் ஊடககற்கையும் | தரம் :- 12 (2018) | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி – I

❖ பின்வரும் வினாக்களில் மிகப்பொருத்தமான விடையைதெரிவு செய்து விடைத்தாளில் புள்ளடியிடுக.

1. “தொடர்பியில் செயன் முறை” எனும் நூலின் ஊடாக தொடர்பாடல் மாதிரி பற்றி விளக்கியவர்.
   1) ஷெனோன் மற்றும் வீவர் 2) ஒஸ்கூட் மற்றும் லில்பர் ஷராம் 3) டேவிட். K. பெர்லோ
   4) கேட்.லியூன் 5) அரிஸ்ரோட்டில்.

2. உணர்வுகளை புரிந்து கொள்ள முடியாது.
   பரந்துபட்ட தொடர்பாடல் செயன்முறை
   பின்னூட்டல் வாய்ப்பு மிக அரிது / தாமதமானது
   மேற்படி கூற்றுக்களுடன் தொடர்புபட்ட தொடர்பாடல் வகை
   1) வெகுசனத் தொடர்பாடல் 2) குழுத் தொடர்பாடல் 3) நபரகத் தொடர்பாடல்
   4) நபரிடைத் தொடர்பாடல் 5) முறைசார் தொடர்பாடல்

3. “சூழலுக்கேற்ப மாறிக் கொண்டேயிருக்கும் பிறரை புரிந்து கொள்ளும் செயன்முறை தொடர்பாடல்” என வரைவிலக்கனப்படுத்தியவர்.
   1) எச். இ. கல்லீ 2) புருக்கர் 3) டெனிஸ். மக்குவல்
   4) மார்டின்.பி. அன்டர்சன் 5) ஷெனோன் மற்றும் வீவர்

4. நபரகத் தொடர்பாடலின் இயல்புகள் அல்லாதது.
   1) தூண்டல் துலங்கல் செயற்பாடு முக்கியம் பெறல்
   2) அனுப்புநர் பெறுநர் ஒருவராகக் காணப்படல்
   3) ஒரு வழித் தொடர்பு காணப்படல்.
   4) ஐம்புலன்கள் முக்கியம் பெறல்
   5) மன எழுச்சி நிலைகளில் தொடர்பாடல் வினைத்திறனாக காணப்படல்

5. அறிவுச் சமூக இயல்புகளில் உள்ளடங்காதது.
   1) தகவலை அடிப்படையாக கொண்ட சமூகம்
   2) 15ம் நூற்றாண்டுகளில் உதித்த ஒன்று
   3) உயர் தொழினுட்ப ஊடகப் பயன்பாடு காணப்படும்
   4) அறிவுச் சமூகத்திற்கென சிந்தனை சிறப்பியல்பு உண்டு
   5) மனித வரலாற்றின் நவயுகம்.

6. அறிவுத் தேடலில் பல்வேறு நுட்பமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன அவற்றில் உள்ளடங்காதது
   1) பிரதிநிதித்துவம் 2) அனுபவம் 3) பரிசோதனை 4) அவதானிப்பு 5) பகுப்பாய்வு

7. ஈ.ய எழுத்துக்கள் எவ் அச்சிடல் முறைக்காக பயன்படுத்தப்படுகின்றன.
   1) சமதள அச்சுமுறை 2) எண்சார் அச்சுமுறை 3) திரை அச்சுமுறை
   4) குவிவு அச்சுமுறை 5) டிஜிட்டல் அச்சுமுறை

8. ஒருவருடன் நெருங்கி வாழ்ந்து அவரது அனைத்துக் கோலங்களினையும் தமதாக்கி கொள்ளும் செயற்பாடு
   1) போலச் செய்தல் 2) முன்மாதிரி 3) வகிபாகம் ஏற்றல்
   4) பின்பற்றுதல் 5) அவதானம்

9. A. குடிமக்கள் செய்தி அறிவிப்பில் ஈடுபடுதல்
B. சமூக நோக்கங்களை நிறைவேற்றுச் செயற்படுதல்
C. இலாப நோக்கத்தினை மையமாக கொண்டு செயற்படுதல்
D. பங்குபற்றல் ஜனநாயகதன்மை வலுவடைதல்.
மேற்குறித்த செயற்பணிகளுடன் தொடர்புடைய குடிமை ஊடகத்தின் இயல்ஸ பிரதிபலிப்பது.
1) A,B,D  2) B,C,D  3) A,C,D  4) A,B,C  5) A,B,C,D அனைத்தும்.

10. வெகுசன ஊடகம் தொடர்பில் பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.
1) ஊடக உரிமையாண்மை ஊடகத்தன்னாதிக்கத்திற்கு இட்டுச் செல்கின்றது.
2) தேர்தல் அரசியல் இப்போதும் செய்தி வெளியீடுகளில் முதன்மை இடம் வகிக்கிறது.
3) செய்திகள் எப்போதும் மேலிருந்து கீழாக எடுத்துச் செல்லப்படும்.
4) பெறுநர்களின் செயலூக்கம் மிக்க பங்கேற்பு இங்கு காணக் கிடைக்கும்
5) பூகோளத்தகவல் கிராமம் வெகுசன ஊடகத்தின் ஓர் உபவிளை பொருள்

11. அச்சிடல் தொழிநுட்பத்தின் தோற்றம் தொடர்பில் வரலாற்றில் ஆக முன்னயதும் மிகப் பின்னியதுமான தகவல்கள் கிடைக்கப்பெற்றது.
1) இங்கிலாந்திலும் ஜேர்மனியிலும்  2) கிரேக்கத்திலும் உரோமிலும்
3) இந்தியாவிலும் ஸ்பெயினிலும்  4) சீனாவிலும் ஜேர்மனியிலும்
5) பிரான்சிலும் ஸ்பெயினிலும்

12. ஒரு நபரை மையமாக வைத்து செய்தியானது அவரிடமிருந்து நாலாபுறமும் பலருக்கும் பரவிச்செல்லும் அமைப்பை கொண்ட தொடர்பாடல் மாதிரி.
1) சங்கிலி மாதிரி  2) y மாதிரி  3) சக்கர மாதிரி
4) கொத்தணி மாதிரி  5) வட்டவடிவ மாதிரி

13. தொடர்பாடல் செயற்பாடுகளில் இதுவரை காலமும் அதிகம் ஆராயப்படாது காணப்பட்ட அனுப்புவருக்கான மற்றும் பெறுநர்களிற்கான தகுதிகள் அல்லது இயல்புகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்திய அறிஞர்
1) ஹரோல்ட். டி. லாஸ்வெல்  2) சாள்ஸ் ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம்
3) டேவிட்.கே.பெர்லோ  4) சாள்ஸ் கூலி  5) ஷெனோன் மற்றும் வீவர்

14. ஒருவரின் மன எழுச்சி உணர்வை தன்னில் ஏற்படுத்தி அதே அடிப்படையில் உணர்வது எவ்வாறு அழைக்கப்படும்.
1) ஒத்துணர்வு  2) ஆழ்பரிவு  3) தன்வயப்படுத்துதல்
4) ஒழுக்கபண்பு  5) இரக்கப்படுதல்

15. பின்வரும் தொடர்பாடல் ஊடக உபகரண செயலொழுங்கில் எறிவை சார் ஊடக உபகரணமாக அமையாதது.
1) ஊடாடுகை பலகை  2) பல்லூடக எறிவை  3) கரும்பலகை
4) துரித எறிவை  5) மேந்தலை எறிவைகருவி

16. பாட்டாளி மக்கள் குழுவினைப் பொறுத்தவரை அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்கான சிறந்த வழியாக சங்கம் அமைத்தல் செயற்பாடு கட்சியே இதழாசிரியர்களை நியமித்தல் எதை எங்கனம் எவ்வாறு வெளியிடுதல் வேண்டும் என்பதனை கட்சியே தீர்மானித்தல் ஆகிய செயற்பாடுகளோடு தொடர்புடைய கோட்பாடு
1) சோவியத் பொதுவுடமை கோட்பாடு
2) ஆட்சி அதிகார கோட்பாடு
3) அபிவிருத்தி இதழியல் கோட்பாடு
4) சமூக பொறுப்புணர்வு கோட்பாடு
5) சுதந்திரவாத கோட்பாடு

17. A – எளிமையான மொழிநடைப்பாவனை
B – எழுத்து மொழி பிரதானமானது
C – கற்பனை உருவாக்கத்திற்கு வழிகோலுதல்
D - இடத்துக்கிடம் எடுத்துச் செல்லல்
E – விபரணமாக செய்தி அறிக்கையிடல் காணப்படும்.
மேற்குறித்த பண்புகளில் வானொலி ஊடக இயல்புகளுடன் தொடர்புடைய தொகுதி.
1) A, B, C 2) A, B, E 3) A, C, D 4) A, D, E 5) A. B, C, D, E அனைத்தும்

18. பொதுசனத் தொடர்புகொள்ளல் செயற்பாட்டில் சந்தைப்படுத்தல் கலவை செயற்பாட்டுடன் தொடர்புபடாதது.
1) உற்பத்தி 2) விலை 3) விநியோகம் 4) மேம்பாடு 5) பிரசித்தம்

19. ஒரு கலாசார அம்சங்கள் வேறு ஒரு கலாசாரத்தினுள் வலுக்கட்டாயமாக இணைத்துக் கொள்ளும் செயற்பாடு
1) கலாசார அதிர்வு 2) கலாசார ஆக்கிரமிப்பு 3) கலாசார பரிமாற்றம்
4) கலாசார மோதல் 5) கலாசார விருத்தி

20. தீர்மானம் ஒன்றினை எடுப்பதற்கான படிமுறைகள் கீழே தரப்படுகின்றன.
A – மிகவும் பொருத்தமான தீர்மானத்தை எடுத்தல்
B – மாற்றுத் தீர்மானங்களினை மதிப்பிடுதல்
C – தீர்மானம் எடுக்கும் அவசியத்தை முடிவு செய்தல்
D – பிரச்சினையின் இயல்பை பகுப்பாய்வதும் ஆய்வதும்
E – ஒரு பிரச்சனை இருப்பதனை இனங்காணல்
மேற்குறித்த அம்சங்களின் செயற்பாடுகளினை ஒழுங்குமுறைப்படி குறித்து நிற்பது.
1) A, B, C, D, E 2) E, D, C, B, A 3) A, D, C,B, E
4) D, A, C, B, E 5) B, D, A, C, E

❖ **கீழ்வரும் அட்டவனையை அடிப்படையாக கொண்டு 21 முதல் 25 வரையான வினாக்களிற்கு விடையளிக்குக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| A | குறிமுறையாக்குபவர் / தொடர்பியலாளர் | E | குறிமுறையவிழ்ப்பவர் / பெறுதல் | I | யார் / கடத்தி | M | யாருக்கு |
| B | செய்தி | F | இடையூறு | J | சேருமிடம் | N | சூழமைவு |
| C | விளைவு | G | வியாக்கியானம் செய்தல் | K | தகவல் மூலம் | O | அனுபவக்களம் |
| D | குறியீடுகள் | H | வழி / அலைவரிசை. | L | பின்னூட்டம் | P | சமிக்ஞை |

21. மேற்குறித்த அம்சங்களில் ஹரோல்ட்.டி.லாஸ்வெல்லின் வியாக்கியானத்தில் உள்ளடக்க முடியாத மூன்று அம்சங்கள்
1) A, C, I 2) C, M, K 3) D, H, I 4) D, K, L 5) M. B. N

22. மேற்குறித்த அம்சங்களிலிருந்து ஒரு வழித் தொடர்பு கொள்ளல் செயற்பாட்டை இருவழித் தொடர்பாக மாற்ற உதவுவது
1) I இன் செயற்பாடு 2) M இன் செயற்பாடு 3) C இன் செயற்பாடு
4) F இன் செயற்பாடு 5) L இன் செயற்பாடு

23. மேற்குறித்த அம்சங்களிலிருந்து B ஆனது E இலிருந்து A இற்கு செல்வதாக வைத்துக் கொள்ள இதனால் அடையாளப்படுத்தப்படுவது
1) L 2) J 3) C 4) G 5) F

24. மேற்குறித்த அம்சங்களினை அடிப்படையாக கொண்டு டேவிட்.K.பெர்லோவினது தொடர்பியல் அம்சங்களினை உள்ளடக்கியிருப்பது
1) A, B, E, G 2) A, B, H, E 3) A, B, I, K 4) I, B, E, F 5) I, B, D, E

25. மேற்குறித்த அம்சங்களில் இருந்து கலந்துரையாடல் மாதிரியை புரிந்து கொள்வதற்கு உதவும் பொருத்தமானவற்றை தரும் தொகுதி
1) A, B, E, G 2) A, B, E, J 3) A, E, C, M 4) B, D, N, G 5) B, E, H, G

## பகுதி – II

❖ விரும்பிய 5 வினாக்களிற்கு விடையளிக்குக.

**01. "செய்தி or தகவல் பரிமாற்றம் தொடர்பாடல் எனலாம்"**

1) வாய் மொழி அல்லாத் தொடர்பாடல் பற்றி **கலீமற்றும் லெதர்ஸ்** கூறும் கருத்துக்கள் 4 தருக? (2 புள்ளிகள்)

2) உடல் மொழி ரீதியிலான தொடர்பாடலின் முக்கியத்துவம் பற்றி உதாரணங்கள் மூலம் கருத்துரைக்குக. (3 புள்ளிகள்)

3) தொடர்பாடலின் வரலாற்று ரீதியிலான காலகட்ட வளர்ச்சிகளை வகைப்படுத்தி ஒவ்வோர் உதாரணம் தருக. (4 புள்ளிகள்)

4) நிறுவனம் ஒன்றில் நடைபெறும் தொடர்பாடல் வடிவங்களில் முறைசார் தொடர்பாடல் பற்றி விளக்குக. (6 புள்ளிகள்)

**02."தகவல் பரிமாற்றச் செயலொழுங்கு சமூகத்தினை அடிப்படையாக கொண்டு நிகழுகின்றது"**

1) சமூகம் என்பதனை வரையறை செய்க? (2 புள்ளிகள்)

2) எழுத்து, மூலத் தொடர்பாடலுக்கு என பயன்படுத்தப்படுகின்ற வடிவங்களினை 4 குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

3) சமூககட்டமைப்பு என்பதில் இருந்து நீர்விளங்குவது யாது எனக் குறிப்பிட்டு அதனை ஏற்படுத்தும் நிறுவனங்களினை பட்டியற்படுத்துக? (4 புள்ளிகள்)

4) உலகமயமாக்கல் சூழல் சமூகத்தில் கொண்டுள்ள தாக்கம் பற்றி விமர்சன ரீதியில் ஆராய்க. (6 புள்ளிகள்)

**03. தொடர்பாடல் செயல்நிகழ்விற்கு ஊடக உபகரணங்களும் அவசியமானவை ஆகும்.**

1) தனியாள் தொடர்பாடல் செயலொழுங்கின் படிமுறைகள் எவை? (2 புள்ளிகள்)

2) கேட்டல் தேர்ச்சியை விருத்தியாக்கும் படிமுறைகள் எவை? (3 புள்ளிகள்)

3) ஆளிடைத் தொடர்பாடலின் இயல்புகளை குறிப்பிட்டு இரண்டினை விளக்குக? (4 புள்ளிகள்)

4) சுய எண்ணக்கரு என்றால் என்ன என வரையறை செய்து அதன் முக்கியத்துவம் தொடர்பில் கருத்துரைக்குக? (6 புள்ளிகள்)

**04. மொழி தொடர்பியலுக்கு இன்றியமையாத ஊடகம் ஆகும்**

1) எழுத்துரு வடிவத்தின் இரு வகைகளும் அவை பயன்படும் நாடுகள் / மொழிகளையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2) வாழும் மொழியின் பண்புகள் எவை? (3 புள்ளிகள்)

3) மொழியின் பல்வேறு பயன்பாடுகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக? (4 புள்ளிகள்)

4) இலத்திரனியல் ஊடகங்களில் மொழியினைக் கையாளும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பண்புகளை குறிப்பிட்டு விளக்குக? (6 புள்ளிகள்)

**05. “நிறுவனம் ஒன்று நிலைத்து நிற்பதற்கு பொதுசனத் தொடர்பு அவசியமாகும்”**

1) பொதுசனத் தொடர்பு பற்றிய பிரித்தானிய மக்கள் தொடர்பு நிறுவன வரைவிலக்கணத்தை வரையறை செய்க? *(2 புள்ளிகள்)*

2) அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிகள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட விடயங்கள் 4 ஐ குறிப்பிடுக. *(3 புள்ளிகள்)*

3) பொதுமக்கள் தொடர்புச் செயற்பாட்டிற்காக புகைப்படங்களினை பயன்படுத்துவதன் வடிவங்களினை குறிப்பிட்டு விளக்குவதோடு புகைப்படத்தின் முக்கியத்துவம் தொடர்பிலும் கருத்துரைக்குக? *(4 புள்ளிகள்)*

4) பொதுசனத் தொடர்பு செயற்பாட்டினை இலங்கையில் பரவலாக்குவதற்கு காலணித்துவ கால செயற்பாடுகள் ஆதாரமாய் அமைந்தன. அதனடிப்படையில் மேற்குறித்த விடயத்தினை மையமாக கொண்டு ஆராய்க? *(6 புள்ளிகள்)*

**06. “பண்பாடு என்பது பாடறிந்து ஒழுகுவது ஆகும்”**

1) ஊடகத்திற்கும் பண்பாட்டிற்கும் இடயிலான தொடர்பினை வெளிப்படுத்துக. *(2 புள்ளிகள்)*

2) பொதுமக்கள் தொடர்பிற்காக பயன்படும் கண்காட்சியின் வகைகள் 4 தருக? *(3 புள்ளிகள்)*

3) பண்பாட்டு அதிர்வு என்றால் என்ன என்பதனை உதாரணம் மூலம் விளக்குக? *(4 புள்ளிகள்)*

4) ஊடக விளம்பரங்களும் சமூகப் பாதிப்பும் எனும் தலைப்பில் செய்திக் கட்டுரை ஒன்று தயாரிக்குக. *(6 புள்ளிகள்)*

**07. “தொடர்பாடலின்றி உயிரினங்கள் உயிர் வாழ முடியாது”**

1) தொடர்பாடல் செயற்பாடு ஒன்றின் அடிப்படை மூலங்கள் எவை? *(2 புள்ளிகள்)*

2) முறைசாரத் தகவல் பரிமாற்றம் நடைபெறும் விதங்களினை வகைப்படுத்தி காட்டுக? *(3 புள்ளிகள்)*

3) சமூகமயமாக்கம் என்பதில் இருந்து நீர் விளங்கிகொள்வது யாது என வரையறுக்குக? *(4 புள்ளிகள்)*

4) பிரஜைகள் ஊடகங்களின் இயல்புகள் / பண்புகள் தொடர்பில் 4 அம்சங்களினை அடிப்படையாக கொண்டு விளக்குக? *(6 புள்ளிகள்)*